www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education
Advanced Subsidiary and Advanced Level

**TAMIL**

**8689/02**
**9689/02**

Paper 2 Reading and Writing

October/November 2005

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen on both sides of the paper.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.
Dictionaries are not permitted.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
You should keep to any word limits in the questions.
At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**பரீட்சார்த்திகளுக்குரிய அறிவுறுத்தல்கள்**

உங்கள் பெயர் பரீட்சை நிலைய இலக்கம் உங்கள் பரீட்சார்த்தி இலக்கம் என்பனவற்றை வினாத்தாள் / விடை எழுதும் புத்தகம் என்பனவற்றில் கொடுக்கப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.
அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத்தாளில் உங்கள் விடையினை எழுதுக.
தாள்களில் ஸ்டாப்லர், வெள்ளை மை, ஹைலைட்டர்களைப் பயன்படுத்தக்கூடாது.
நீங்கள் விடை எழுத வேண்டிய சொற்களின் அளவு ஏதாயினும் தரப்பட்டிருப்பின் அந்த அளவுக்குள்ளாக விடையினை எழுதல் வேண்டும்.
ஒன்றுக்கு மேற்பட்ட விடைத்தாள்களை உபயோகிப்பின் அவற்றை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்

**பரீட்சார்த்திகளுக்குரிய தகவல்**

அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது.
ஒவ்வொரு வினாவின் அல்லது வினாப்பகுதியின் முடிவிலும் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் ( ) தரப்பட்டிருக்கும்.

This document consists of **6** printed pages and **2** blank pages.

UNIVERSITY of CAMBRIDGE

www.PapaCambridge.com

## Section 1
## பகுதி 1

First read the passage and then answer the questions.

**முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் தரப்பெற்றுள்ள வினாக்களுக்கு விடை அளியுங்கள்.**

தோட்டக்கலை மிகவும் பழமையானது; ஆரோக்கிய வாழ்வுக்கு வேண்டிய அத்தனையும் கொண்டது. பழங்கள், காய்கறிகள், கிழங்குகள், மலர்கள், மிளகு, கிராம்பு, ஏலம் போன்ற உணவுக்கு மணமூட்டும் பயிர்கள், வாசனை எண்ணெய் கொடுக்கும் தாவரங்கள், காப்பி, தேயிலை, ரப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்கள், தென்னை மற்றும் எண்ணெய்ப்பனை போன்ற எண்ணெய் வித்துப்பயிர்கள், மூலிகை மருந்துகள் அனைத்துமே தோட்டக்கலைப் பயிர்கள்தாம்.

ஆதிமனிதன் குகைகளில் உறங்கி, காடுகளில் திரிந்த காலத்திலிருந்து, கனிகள், கிழங்குகள் முதலியவற்றை உணவாகக் கொண்டிருந்தான்; மலர்களைச் சூடி இருக்கிறான்; நாகரிகம் வளர்ந்து, மக்கள் தொகை பெருகி, உணவுத்தேவை அதிகரித்த போதுதான் தானியங்களை உண்ண ஆரம்பித்தான். மக்கள் தொகைப் பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் பெறுவதற்காக மேலும் மேலும் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதாகி விட்டது.

தானிய உணவு ஒரு முழு உணவாக இல்லாத காரணத்தினால், மனித வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தையும் கொடுக்காத காரணத்தால் திரும்பவும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். நாகரிகத்தின் உச்சக் கட்டத்தில் இருக்கின்ற நாடுகள் அனைத்தும் தானிய உணவைக் குறைத்துக்கொண்டு திரும்பவும் காய்கனிகள் உணவை அதிகப்படுத்தி வருகின்றன; மலர்களை அதிகமாகப் பயிரிட்டு அவற்றை விலையுயர்ந்த வாணிபப் பொருளாக மாற்றி வருகின்றன; செயற்கை மருந்துகளை விட்டு மூலிகை மருந்துகளை நாடுகின்றன.

தோட்டக் கலையை, ஒரு நாட்டின் முன்னேற்றத்தையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் காட்டுகின்ற அளவுகோலாகக் கொள்ளலாம். எந்த நாடு தோட்டக்கலையில் முன்னேறி இருக்கிறதோ, அந்த நாடே பொருளாதாரத்திலும் முன்னேறி இருக்கிறது என்பதை மேலை நாடுகளைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். சிறிய தோட்டங்களிலே இருந்த அழகு மலர்கள் இன்று கண்ணாடி மாளிகைக்கு வந்து பெருந்தொகையை ஈட்டித் தரும் வாணிபப் பொருளாக மாறிவிட்டன. வசதிபடைத்தோர் உண்டுவந்த காய்களும் கனிகளும் இன்று எல்லோருடைய உணவிலும் பங்கேற்றுக் கொண்டிருக்கிறது. காய்கனிகளைப் பதனிடும் தொழிற்சாலைகள் பெரிய அளவிலே உருவாகி விட்டன. மொத்தத்தில் தோட்டக்கலை மனித நாகரிகத்தை மேம்படுத்தும் சக்தியாகவும், பொருளாதார ஏற்றத்திற்குத் துணைபுரியும் மாற்றுத் திட்டங்களைத் தரக்கூடிய துறையாகவும் மறுமலர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கை முறைகளில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில், வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத கூறாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தோட்டக் கலையின் வளர்ச்சிபற்றியும் அதன் எதிர்காலம் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

www.PapaCambridge.com

**1** For each of the definitions below, find in the text above the word or expression … s meaning most accurately.

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வரைவிலக்கணத்துக்கும் மிகப் பொருத்த… சொல்லைஅல்லது சொற்றொடரை மேலே கொடுக்கப் பெற்றுள்ள பத்தியில் இருந்து எடுத்து எழுதுக.**

<u>எடுத்துக்காட்டு</u> : தென்னை மற்றும் எண்ணெய்ப் பனை போன்ற எண்ணெய் தரும் மரங்கள்

<u>விடை</u> : எண்ணெய் வித்துப் பயிர்

அ. ஆதிமனிதன் உண்டு உறங்கிய இடம் [1]

ஆ. மனித வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் அனைத்தையும் கொண்டது. [1]

இ. செடி கொடிகளிலிருந்து தயாரிக்கப்பெறும் மருந்து வகை [1]

ஈ. அழகு மலர்களைப் பாதுகாப்பாக வளர்ப்பதற்கு உரிய இடம் [1]

உ. காய்கறிகளும் பழங்களும் கெட்டுப் போகாது பதனிடும் இடம் [1]

[Total: 5 marks]

*[மொத்தம் 5 புள்ளிகள்]*

**2** For each of the words/phrases in the list below, write a sentence using the word/phrase in such a way as to reveal its meaning.

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருள் தெளிவாகக் கூடிய வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

<u>எடுத்துக்காட்டு</u> : மாற்றம்

<u>விடை</u> : வாழ்க்கை முறைகளில் பெரிய மாற்றத்தைக் கண்டிருப்பது இந்த நூற்றாண்டு.

அ. ஆரோக்கிய வாழ்வு [1]

ஆ. மக்கள் தொகை [1]

இ. தானிய உணவு [1]

ஈ. வாழ்க்கைத் தரம் [1]

உ. மறுமலர்ச்சி [1]

[Total: 5 marks]

*[மொத்தம் 5 புள்ளிகள்]*

www.PapaCambridge.com

**3** Answer the following questions in Tamil. You must answer without copying complete sentences word for word from the passage.
(The number of marks is given after each question. In addition, 5 marks will be given for general quality of language in the answer. Total number of marks = 15 + 5 = 20)

***பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியில் இருந்து வாக்கியங்களையோ சொற்களையோ அப்படியே பார்த்து எழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.***
***( ஒவ்வொரு வினாவிற்குமான புள்ளிகள் வினாவின் முடிவில் கொடுக்கப்பட்டுள்ளன. அதனுடன் மேலதிகமாக 5 புள்ளிகள் விடையில் காணப்படக்கூடிய பொதுவான மொழித்திறனுக்கு வழங்கப்படும். மொத்தப்புள்ளிகள் 15 + 5 = 20)***

*அ. பெருந்தோட்டப் பயிர்கள் யாவை?* [3]

*ஆ. ஆதிமனிதனின் உணவு என்ன? பின்னர், தானியங்களின் உற்பத்தி பெருக்கத்திற்கான காரணம் என்ன?* [3]

*இ. இன்றைய உலகம் தோட்டக்கலைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் தருவது எவ்வாறு புலப்படுகிறது?* [3]

*ஈ. தோட்டக்கலையினை அளவுகோலாகக் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு அளவிடலாம்?* [3]

*உ. தோட்டக்கலை எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதனை எழுதுக.* [3]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

*[மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்]*
*[மொத்தம் 20 புள்ளிகள்]*

BLANK PAGE

www.PapaCambridge.com

www.PapaCambridge.com

## Section 2
## பகுதி 2

Now read the second passage and then answer the questions.

***தற்போது இரண்டாவது பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.***

*மலர்கள் சூடும் பழக்கம் நம்மிடையே தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. பண்டைக் காலத்தில் நிலத்தினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என மலர்களின் பெயரை வைத்தே அழைத்தனர். ஆடவரும் பெண்டிரும் மலர்களை அணிந்து மகிழ்ந்தனர். திருவிழாக்காலங்களில் மலர்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. மலர்களின் தேவை அதிகரித்ததால், நந்தவனங்களிலும், அரண்மனைகளிலும் இருந்த பூந்தோட்டங்கள் உழவர்களின் கைக்கு வந்தன. மலர்கள் சாகுபடி மற்றப் பயிர்களின் சாகுபடியைவிட மிக லாபகரமாக இருந்தது. ஆனால் மலர்களைக் காலத்தில் பறித்து விற்பனை செய்வதற்கு நிறைய பகுதிநேர ஆட்கள் தேவைப்பட்டதால் மலர்ச் சாகுபடி பெரும்பாலும் சிறுஉழவர்களினால் செய்யப்பட்டு வந்தது. மலர்கள் வெறும் அலங்காரப் பொருளாக இல்லாமல் லாபகரமான தொழிலுக்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தலாம் என்ற நிலை 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. ரோஜாவிலிருந்து பன்னீர் எடுத்தார்கள்; அத்தர் தயாரித்தார்கள், மல்லிகையிலிருந்தும் சம்பங்கியிலிருந்தும் நறுமணத்தைக் கொடுக்கும் எண்ணெயைப் பிரித்தார்கள். இந்தப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைத்ததாலும், ஏற்றுமதி வாய்ப்புகள் இருந்ததாலும் இந்த மலர்களை அதிக அளவில் சாகுபடி செய்து வாசனைப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மலரியல்துறை எனத் தனியாக ஒரு துறையை ஆரம்பித்து வணிகரீதியில் பயிராகும், மல்லிகை, ரோஜா, சம்பங்கி, சாமந்தி, கனகாம்பரம், அரளி ஆகிய இனங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டது. மல்லிகை, முல்லை, பிச்சி ஆகிய மல்லிகை வகைகளின் அதிக விளைவு கொடுக்கக் கூடிய புதிய ரகங்களைத் தெரிந்தெடுத்தது. பிச்சி, ரோஜா, சம்பங்கி ஆகிய பூக்களிலிருந்து வாசனை எண்ணெயைப் பிரித்தெடுக்கும் முறையினைக் கண்டறிந்தது. அதன் பயனாக ஆசியாக் கண்டத்திலேயே முதன்முதலாகப் பிச்சிப் பூவிலிருந்து வாசனை எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் தனியார் துறையில் 1972இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இதையொட்டி மேலும் சில தொழிற்சாலைகள், கோவை மாவட்டத்திலும், வடார்க்காடு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டு பிச்சி மற்றும் சம்பங்கிப் பூவிலிருந்து வாசனை எண்ணெயைப் பிரித்தெடுத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிச்சிப் பூ மற்றும் சம்பங்கி பயிரிடுவதற்கு அதிக வாசனை எண்ணெய் உடைய கோ.1 மற்றும் கோ.2 ஆகிய இரண்டு ரகங்களைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுருக்கின்றது. பிச்சிப்பூ ஓர் ஆண்டில் 5-6 மாதங்கள்தான் கிடைக்கும். சம்பங்கியில் ஆண்டு முழுவதும் மலர்கள் கிடைக்கும். சம்பங்கி வாசனை எண்ணெய் மிக விலை உயர்ந்தது.*

*சாமந்திப் பூவுக்கு வாசனை இல்லாவிட்டாலும் கவர்ச்சியான வண்ணங்கள் உண்டு. வாடாமல்லி, கோழிக் கொண்டை போன்ற பூக்கள் உலர்ந்தாலும் வண்ணத்தை இழப்பதில்லை. உருவத்தை இழப்பதில்லை. ஆகவே இந்த மலர்கள் பறித்த உடன் பயன்படுத்துவதற்கும், உலர்ந்த பிறகு பயன்படுத்துவதற்கும் ஏற்றனவாக இருக்கின்றன. இந்த மலர்கள் உலர்த்திய பிறகு பயன்படுத்துவதற்கும் ஏற்றதாக இருக்கின்றன. இந்த மலர்களை உலர்த்தி மேல் நாடுகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்கிறார்கள்.*

www.PapaCambridge.com

**4** Answer the following questions in Tamil. You must answer without copying complete sentences word for word from the passage.

***பின்வரும் வினாக்களுக்குத் தமிழில் விடை தருக. பத்தியில் இருந்து வார்த்தைகளையோ வாக்கியங்களையோ அப்படியே பார்த்து எழுதாது விடைகளைச் சொந்த வாக்கியங்களில் எழுதுக.***

*அ. மலர்கள் சூடும் பழக்கம் பண்டைக்காலம் தொட்டே தமிழர்களிடையே இருந்து வருகிறது என்பதனை எவ்வாறு அறிகிறோம்?* [3]

*ஆ. மலர்சாகுபடியினை சிறு உழவர்கள் மேற்கொள்ளக் காரணம் என்ன?* [3]

*இ. எந்தெந்த பூக்களிலிருந்து என்னென்ன வாசனைத் திரவியங்கள் பிரித்தெடுக்கப்படுகின்றன?* [3]

*ஈ. சம்பங்கி மலரின் சிறப்பினைக் கூறுக.* [3]

*உ. கோழிக்கொண்டை போன்ற பூக்களின் சிறப்பு என்ன?* [3]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

*[மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்]*
*[மொத்தம் 20 புள்ளிகள்]*

**5** Answer the following questions using a maximum of 140 words in Tamil.

***பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.***

*தோட்டக்கலைப் பயிர்கள் பற்றி நீவிர் அறிந்தவனவற்றைத் தொகுத்து எழுதுக.* [10]
*வாசனைத் திரவியங்கள் உற்பத்தியில் தோட்டக்கலையின் பங்கு என்ன என்பது பற்றி எழுதுக.* [5]

[Quality of Language: 5]
[Total: 20 marks]

*[மொழித்திறனுக்கு 5 புள்ளிகள்]*
*[மொத்தம் 20 புள்ளிகள்]*

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of